


அபூ காலேத் அல் ஷராவி, ஷாகில், ஜக்கரியாஸ் மூசாவி என்று பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டிருக்கும் ஜக்கரியாஸ் மூசாவியை உங்களுக்குச் சற்று நெருக்கமான பரிச்சயம் கொண்டவர் போலத் தெரியலாம். அதாவது, செப்டெம்பர் 11 சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளிலேயே அதிகம் பரிச்சயமானவர் போல.

கடந்த ஏப்ரல் 3, 2006 அன்று அமெரிக்க நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்ததும், ஒரு மாத இடைவெளியில் தீர்ப்பு திருத்தப்பட்டு, மே 4-ம் தேதி அது ஆயுள் தண்டனையாக்கப்பட்டதும், நீதி மன்றத்தில் மூசாவி கொக்கரித்தது குறித்த செய்திகளும் அத்தனை எளிதில் மறந்திருக்காது. மூசாவியின் நீதிமன்ற வாதங்கள் மட்டுமே தொகுக்கப்பட்டால், படு சுவாரசியமான நெடுங்கட்டுரை ஒன்று கிடைக்கும். அத்தனை புத்திசாலி கிரிமினல் அவர்.

மொராக்கோவிலிருந்து பிரான்ஸுக்குக் குடி பெயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர் மூசாவி. பள்ளி, கல்லூரி நாள்களில் எல்லாம் கைப்பந்து விளையாட்டில் சூரர். உலக அளவில் கைப்பந்து விளையாட்டில் பிரான்ஸுக்குப் பெரிய பெரிய மெடல்களும் விருதுகளும் வாங்கிக் கொடுக்கக் கூடியவர் என்று எதிர்பார்த்தார்கள். அத்தனை பேருக்கும் பெப்பே சொல்லிவிட்டு, மூசாவி தீவிரவாதி ஆகிப்போனார்.

இந்த வினாடி வரை தனக்கும் அல் காயிதாவுக்கும் தொடர்பு ஏதுமில்லை என்றும், ஆனாலும் தன்னுடைய அமெரிக்க எதிர்ப்பு உணர்வை மறைக்க விரும்பவில்லை என்றும், தன்னிச்சையாக அமெரிக்காவைத் தாக்க முயற்சி செய்துகொண்டிருந்தபோதுதான் மாட்டிக் கொண்டதாகவும் மூசாவி சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஆனால், அதெல்லாம் புருடா. 1998-ம் ஆண்டிலேயே ஆப்கனிஸ்தானில் இருந்த அல் காயிதாவின் கால்தன் (Khalden) பயிற்சி முகாமில், மூசாவியைப் பார்த்ததற்குப் பல நேரடி சாட்சியங்கள் இருக்கின்றன.

98-லிருந்து இரண்டு வருடங்கள் ஒசாமா பின்லேடனின் நேரடி மேற்பார்வையில் பயிற்சி வகையறாக்களையெல்லாம் முடித்துவிட்டு, செப்டெம்பர் 2000-ல் மூசாவி மலேசியாவுக்குப் புறப்பட்டுப் போனார். அங்கே, சென்ற அத்தியாயத்தில் நாம் சந்தித்த யாசித் ஸுஃபாத் என்கிற உயிரியல் விஞ்ஞானிக்குச் சொந்தமான சிறு ஃப்ளாட் ஒன்றில், வசிக்கத் தொடங்கினார். ஸுஃபாத்திடம் பேசி, அவரது ஃப்ளாட்டில் மூசாவி தங்குவதற்கு ஏற்பாடு செய்தது, செலவுக்கு 35,000 டாலர் பணம் கொடுத்து அனுப்பியது எல்லாம் ஹம்பாலி என்கிற ரிதுவன் நிஸாமுத்தீன்.

எதற்குப் பணம்?

மூசாவி மட்டுமல்ல. மலேசியா, சிங்கப்பூர், பாங்காக் என்று விதவிதமான ரூட்டில் பறந்து வந்த

அல் காயிதாவின் ஆட்கள் அத்தனை பேருக்குமே, முதலில் ஒரு விமானம் என்பது எப்படிப்பட்டது, உள்ளே எப்படி இருக்கும் என்பதில் ஆரம்பித்து, விமானம் ஓட்டும் பயிற்சி வரை புதிதாக அறிமுகமாக வேண்டியிருந்தது.

ஹம்பாலியிடம் காலீத் ஷேக் கேட்டுக் கொண்ட உதவிகளில் தலையாயது இதுதான். 'எங்கள் ஆட்களுக்கு விமானத்தை அறிமுகம் செய்யுங்கள். அதுவே பெரிய உதவி.'

ஆகவே ஹம்பாலியும், ஜமா இஸ்லாமியாவின் வேறு சில மூத்த கமாண்டர்களும் தென் கிழக்காசியாவில் விமானம் ஓட்டக் கற்றுத் தரும் பயிற்சிப் பள்ளிகள் எங்கெல்லாம் உள்ளன என்று தேடத் தொடங்கினார்கள். சிங்கப்பூர் போன்ற இடங்களில் சில பள்ளிகள் அவர்களுக்குக் கிடைத்தன. என்றாலும், ஹம்பாலிக்கு அதிலெல்லாம் நம்பிக்கை வரவில்லை. அல்லது, வேற்று தேசத்து முஸ்லிம் இளைஞர்களைச் சந்தேகப்படாமல் சேர்த்துக் கொண்டு பயிற்சியளிக்க, அந்தப் பள்ளிகள் தயாராக இல்லை.

அதனால், ஹம்பாலிதான் முதன் முதலில் அமெரிக்காவில் இருக்கிற பயிற்சிப் பள்ளிகளுக்குப் போய்ப் படிக்கலாம் என்கிற யோசனையை காலீத் ஷேக்கிடம் தெரிவித்தார்.

2001 பிப்ரவரி முதல் மே மாதம் வரை மூசாவி அமெரிக்காவில் ஒக்லஹாமா மாகாணத்தில் உள்ள ஒரு விமானப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்தார். ஆனால், நான்கு மாதங்கள் முடிந்தும் அவருக்கு விமானத்தின் சூட்சுமம் பிடிபடவில்லை. பறக்கக் கற்றுக் கொள்ள முடியவில்லை. பரீட்சையில் தோற்று, பிரைவேட் பைலட் லைசென்ஸ் பெறாமலேயே வெளியேற வேண்டி வந்தது.

பின்னால், செப்டெம்பர் 11 சம்பவத்துக்குத் தேர்வான ஆட்களில், மூசாவி இல்லாமல் போனதற்கு வேறு பல காரணங்கள் இருந்தாலும், அதெல்லாம் இந்த இடத்துக்குச் சம்பந்தமில்லாதது. 2001 ஆகஸ்டில் அவர் கைதானது தொடங்கி, கடந்த வருடம் ஆயுள் தண்டனை பெற்றது வரை அது தனியொரு கதை. தனியொரு சந்தர்ப்பத்தில் பார்க்க நேர்ந்தால் பார்க்கலாம்.

இப்போது ஹம்பாலியிடம் பயிற்சிக்கு வந்த மற்றவர்களைக் கவனிக்கவேண்டும். கல்லத், அபூ பாரா, காலித் அல் மிஹ்தர், நவாப் அல் ஹஜ்மி.

இவர்கள் நால்வரும் ஆப்கனிஸ்தானில் அடிப்படைப் பயிற்சி முடித்து, அவரவர் ஊருக்குப் போய்விட்டு வேறு வேறு வழிகளில் மலேசியாவுக்கு வந்து சேர்ந்தவர்கள். இதில், மிஹ்தரும் ஹஜ்மியும் மலேசியாவுக்கு வந்த விமானத்தில் ஒரு காமெடி நடந்தது.

அந்த விமானத்தில், ஓர் அமெரிக்க உளவாளியும் பயணம் செய்தார். சம்பந்தப்பட்ட உளவாளிக்கு, இந்த முகங்களை எங்கோ பார்த்திருக்கிறோமே என்று சந்தேகம். ஆனால், நினைவுபடுத்திக்கொள்ள முடியவில்லை. தவிரவும், அவர்கள் இருவரும் ரகசியமாகப் பேசிக்கொண்டது, விமானத்தில் நடந்து கொண்ட விதம், அடிக்கடி காக்பிட் இருக்கிற இடத்துக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தது எல்லாமே சந்தேகத்தைக் கொடுத்தன.

ஆனால், எப்படி உறுதி செய்துகொள்வது? எதற்கும் இருக்கட்டும் என்று நேரே போய், புனைபெயரில் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

கில்லாடி கிரிமினல்களான இருவரும் சமர்த்து மாணவர்கள். அவரிடம், தங்கள் படிப்பு குறித்தும் எதிர்காலம் குறித்தும், மலேசியாவில் மாமா வீட்டுக்குப் போய் அதை எப்படிக் கைப்பற்றப் போகிறோம் என்பது குறித்தும் ஒரு முழு நீள நாவலை வாசித்துவிட்டு, நடையைக் கட்டிவிட்டார்கள்.

அவர்களுடைய வேலை என்ன? ஏமன் பாஸ்போர்ட்டை உபயோகித்து மலேசியாவுக்குப் போய்,

அங்கு காரியம் முடிந்ததும் ஆளுக்கொரு போலி சவூதி பாஸ்போர்ட் மூலம் அமெரிக்காவுக்கு விமானம் ஏறிவிடுவது.

இந்த சவூதி பாஸ்போர்ட், சவுக்கார்பேட்டை பாஸ்போர்ட் எல்லாம் உற்பத்தி பண்ணிக் கொடுக்கவேண்டிய பொறுப்பையும் ஜமா இஸ்லாமியா ஏற்றிருந்தது. (காலீத் ஷேக்கே இதற்கு ஏற்பாடு செய்துவிட்டார் என்றும் ஒரு தகவல் உண்டு.)

இவர்கள் இருவரும் மூசாவி வந்து தங்கிய ஃப்ளாட்டிலேயே தங்க வைக்கப்பட்டார்கள்.

அடுத்த பேட்சில் வந்து சேர்ந்த கல்லத் மற்றும் அபூ பாரா இருவரையும் ஹம்பாலி தன்னுடைய வீட்டிலேயே தங்கச் செய்தார். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முக்கியமான காரியம், விமான நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி இருக்கின்றன என்பது குறித்து ஓர் ஆய்வு அறிக்கை தயாரிப்பது!

ஹம்பாலி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். இரண்டு பேருக்கும் விமான நிலையத்தில் தடையின்றி நுழைவதற்கும் தலா ஒரு விமானப் பயணத்துக்கும் அவர் ஏற்பாடு செய்திருந்தார். விமான காக்பிட்டின் அமைப்பு, கதவு திறந்து மூடப்படும் சமயங்கள், விமானி எப்போதெல்லாம் வெளியே வந்து பாத்ரூம் போகிறார், விமானப் பணிப்பெண்கள் எப்போது சிற்றுண்டி பரிமாறுகிறார்கள், எப்போது மக்கள் சரக்கு பாட்டில் திறக்கிறார்கள், எப்போதெல்லாம் ஒரு தாக்குதலுக்கான தருணம் வாய்க்கிறது என்று பார்ப்பதற்கான வாய்ப்பு இது.

ஒரு விஷயம். இதெல்லாம் ஒவ்வொரு தேசத்து விமானத்திலும் வேறு வேறு மாதிரி இருக்கும். எல்லா விமானங்களும் ஒரே மாதிரியும் இருக்காது. ஹம்பாலி ஏற்பாடு செய்திருந்தது, இரண்டு பேருக்குமே அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களைத்தான். டார்கெட் அதுதானே?

டிசம்பர் 31-ம் தேதி (2000) கல்லத், முதன்முதலாக மலேசியாவிலிருந்து பாங்காக் செல்லும் விமானம் ஒன்றில் ஏறினான். மறுநாள் அங்கிருந்து ஒரு அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்தைப் பிடித்து ஹாங்காங் சென்றான். அந்த விமானத்தில் அவன் முதல் வகுப்பு டிக்கெட் எடுத்திருந்தான். டிக்கெட் எடுத்த பிறகுதான் தெரிந்தது, அது ஒரு மடத்தனமான செயல் என்பது.

ஏனெனில், அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களில், முதல் வகுப்பில் இருந்தபடி காக்பிட்டைக் கவனிக்க முடியாது.

அடடா என்று கொஞ்சம் வருத்தப்பட்டாலும் உடனடியாக சுதாரித்துக் கொண்டு, அடுத்த காரியத்தில் இறங்கினான். விமானத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி இருக்கின்றன? அதைத் தெரிந்துகொள்ளலாமே?

பொதுவாக, விமானங்களில் எந்த விதமான ஆயுதங்களும் எடுத்துச் செல்ல அனுமதி கிடையாது. நேரடி ஆயுதமாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. ஆயுத ஜாதியில் ஒரு சாது வஸ்துவுக்குக் கூட அனுமதி கிடையாது. அமெரிக்கன் ஏர்லைன்ஸில் இந்த விஷயத்தில் ரொம்ப கறாராக நடந்து கொள்வார்கள்.

எனவே, கல்லத் ஒரு பரிசோதனை முயற்சியாகத் தன்னுடைய டாய்லெட் கிட்டில் ஒரு கட்டிங் ப்ளேயரை எடுத்துக்கொண்டு சென்றிருந்தான். அதிகாரிகள் வந்தார்கள். திறந்து பார்த்தார்கள். மூடிக் கொடுத்துவிட்டார்கள். ஒரு கொசுவின் கண்ணிலும் அது வித்தியாசமாகப் படவில்லை!

உற்சாகமாகிவிட்டான் கல்லத். மறுநாள் இன்னொரு விமானம் ஏறி பாங்காக் வந்துவிட்டான். பாங்காக் விமான நிலைய அதிகாரிகள் அவனது டாய்லெட் கிட்டைத் திறந்து கட்டிங் ப்ளேயரை வெளியே எடுக்கவும் செய்தார்கள். ஆனால், அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்துவிட்டு

சமர்த்தாக உள்ளே வைத்துக் கொடுத்து விட்டார்கள்.

இதே மாதிரியான விமானப் பயணங்களை அபூ பாராவும் மேற்கொண்டான். மூன்று அல்லது நான்கு பயணங்கள். விமானம், விமான நிலையம் எல்லாம் எப்படி இருக்கும், செக்யூரிட்டி எப்படி, அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களின் தனித்தன்மை என்ன, உள்ளே யார் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று எல்லாவற்றையும் கவனமாகப் பார்த்துக் குறித்துக் கொண்டார்கள்.

இந்த நோட்டமிடும் காண்டம் ஒரு புறம் நடக்க, மறுபுறம் ஹம்பாலி அவர்களுக்கு அடிப்படை ஆங்கிலம் போதிக்கும் பணியையும் மேற்கொண்டார். பெரும்பாலான 9/11 குற்றவாளிகளுக்குக் கல்வியறிவு கிடையாது. ஜெர்மனியிலிருந்து வந்த நான்கு பேருக்கும் கல்லத், மூசாவி போன்ற ஒரு சிலருக்கும் மட்டும்தான் படிப்பறிவு ஆங்கில அறிவு உண்டு. மற்ற சவூதி அரேபியத் தீவிரவாதிகள் அனைவரும் கைநாட்டுக்காரர்கள்.

அவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி, அமெரிக்க டெலிபோன் டைரக்டரியை வைத்துக்கொண்டு அமெரிக்கப் பெயர்ப் பரிச்சயப் பயிற்சி, விமான சிமுலேட்டர் மென்பொருளைக் கொண்டு விமானம் ஓட்டும் பயிற்சி போன்றவற்றையும் ஜமா இஸ்லாமியாவின் கமாண்டர்கள் சிலர் அளித்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

இவற்றையெல்லாம் பெரும்பாலும் காலீத் ஷேக் முஹம்மதுவே கராச்சியில் செய்துவிட்டார் என்றபோதும், பாங்காக்கிலும் மலேசியாவிலும் வைத்து, ஜமா இஸ்லாமியா கமாண்டர்களும் மேற்படி பயிற்சியை அளித்திருக்கிறார்கள்.

இதெல்லாம் கூடப் பிரமாதமில்லை. இன்றுவரை விடை கிடைக்காத ஒரு கேள்விக்கான காரியத்தையும் 9/11 தீவிரவாதிகள் கிழக்காசியாவுக்கு வந்திருந்தபோது, ஜமா இஸ்லாமியா செய்தது. அது – ஜக்கரியாஸ் மூசாவிக்கு அம்மோனியம் நைட்ரேட் என்கிற வேதிப்பொருள் வாங்குவதற்குக் கணிசமாக அவர்கள் உதவியிருக்கிறார்கள்.

அம்மோனியம் நைட்ரேட் என்பது பெரும்பாலும் சக்தி மிக்க வெடி குண்டுகளுக்கு மூலப்பொருளாகப் பயன்படும் பொருள். மூசாவிக்கு அது எதற்கு? ஒசாமா வாங்கி வரச் சொன்னாரா? அவருக்குத்தான் எதற்கு? வெடிபொருளை மலேசியாவில் வாங்கி எங்கே எடுத்துப் போகப் போகிறார்கள்? ஆப்கனிஸ்தானுக்கா? அமெரிக்காவுக்கேவா? அமெரிக்காவுக்கு என்றால், அங்கே அதற்கென்ன வேலை? விமானமே அல்லவா ஆயுதமாகப் போகிறது?

இக்கேள்விகளுக்கு மட்டும் பதில் கிடையாது. இன்றுவரை உயிருடனேயே இருக்கிற கேள்விகள் இவை.